**OCTOBER 2011** **U/ID 22303/UCWD**

Time : Three hours Maximum : 100 marks

SECTION A — (10 × 3 = 30 marks)

Answer any TEN questions.

All questions carry equal marks.

Each answer should not exceed 50 words.

1. Define : ‘preference share’.

   வரையறு : ‘முன்னுரிமை பங்கு’.

2. What do you mean by firm underwriting?

   நிறுவன ஒப்புறுதியளிதல் என்பதன் உமது பொருள் என்ன?

3. What do you understand by unmarked application?

   குறிக்கப்படாத விண்ணப்பம் பற்றி நீவிர் அறிவது யாது?

4. What is pro-rata allotment of shares?

   பங்குகள் விகிதாச்சார ஒதுக்கீடு என்றால் என்ன?

5. What are various types of goodwill?

   நற்பெயரின் பல்வேறு வகைகள் யாவை?

6. What do you understand by forfeiture of share?

   பங்கு ஒறுப்பிழப்பு பற்றி நீவிர் அறிவது யாது?

7. What do you mean by errors of omission?

   விடுபிழைகள் பற்றி நீ அறிவது என்ன?

8. Define auditing.

   தணிக்கைக்கு வரைவிலக்கணம் தருக.

9. What is an audit programme?

   தணிக்கை நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?

10. Define internal audit.

அகத் தணிக்கைக்கு வரைவிலக்கணம் தருக.

11. What do you understand by verification?

சரிபார்த்தல் பற்றி நீவிர் அறிவது யாது?

12. What is a compulsory audit?

கட்டாயத் தணிக்கை என்றால் என்ன?

SECTION B — (5 × 6 = 30 marks)

Answer any FIVE questions.

All questions carry equal marks.

Each answer should not exceed 200 words.

13. Good luck limited decided to redeem its preference shares as on $31^{st}$ March 1999 on which date its position was as under :

| | Rs. |
|---|---|
| Share capital : | |
| 12% Redeemable preference shares of | |
| Rs. 100 each fully paid up | 30,00,000 |
| Equity shares of Rs. 100 each fully paid up | 1,70,00,000 |
| Share premium | 17,00,000 |
| General reserve | 25,00,000 |
| Other liabilities | 58,00,000 |
| | 3,00,00,000 |

The board of directors decided to redeem the preference shares both by issue of fresh capital and by utilization of reserves but without any further borrowings. You are required to advise them the scheme for redemption and draw up the balance sheet after redemption with journal entries.

குட்லக் நிறுவனம் 31 மார்ச் 1999-ல் தனது முன்னுரிமைப் பங்குகளை மீட்டுக் கொள்ள முடிவு செய்தது. அந்நாளைய நிலவரம் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| பங்குமுதல் : | |
| ரூ. 100 மதிப்புள்ள முழுதும் செலுத்தப்பட்ட 12% | |
| மீள்தகு முன்னுரிமை பங்குகள் | 30,00,000 |
| ரூ. 100 மதிப்புள்ள முழுதும் செலுத்தப்பட்ட | |
| சாதாரணப் பங்குகள் | 1,70,00,000 |
| பங்கு முனைமம் | 17,00,000 |
| பொதுக் காப்பு | 25,00,000 |
| பிற பொறுப்புகள் | 58,00,000 |
| | 3,00,00,000 |

மேற்கொண்டு எவ்வித கடனையும் பெறாமல், காப்பிருப்பு மற்றும் புதிய பங்கு வெளியீட்டின் மூலம் முன்னுரிமைப் பங்குகளை மீட்டுக் கொள்ள இயக்குநரவை முடிவு செய்தது. இத்திட்டத்தினைப் பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்கி, மீட்புக்கு பிந்தைய இருப்பு நிலைக் குறிப்பினை தயார் செய்ய நீவிர் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர். குறிப்பேட்டுப்பதிவுகள் தருக.

14. What are various types of debentures?

கடன் பத்திரங்களின் பல்வேறு வகைகள் யாவை?

15. White limited issues 10,000 12% debentures of Rs. 100 each. Give journal entries if the debentures and redeemable at par and are issued

(a) at par

(b) at a discount of 2 percent and

(c) at a premium of 3 percent.

வெயிட் நிறுவனம் ரூ. 100 மதிப்புள்ள 10,000 12% கடன்பத்திரங்களை வெளியிடுகின்றது. இக்கடன் பத்திரங்கள் முகமதிப்பில் மீட்கப்படும் போது மற்றும்

(அ) முகமதிப்பில் வெளியிடப்பட்டால்

(ஆ) 2 சதவீத வட்டத்தில் வெளியிடப்பட்டால், மேலும்

(இ) 3 சதவீத முனைமத்தில் வெளியிடப்பட்டால் தோன்றும் அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

16. A company issues 1,000 14% debentures each at a premium of 20% sixty percent of the issue was under written by M/s. Bulls and Bears at the maximum rate of commission allowed by law. Applications were received for 800 debentures which were accepted and payment of these was received in full. Give journal entries.

ஒரு நிறுவனம் 20% முனைமத்தில் 1,000 14% கடன்பத்திரங்களை வெளியிடுகிறது. சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச கழிவிற்கு M/s. காளைகள் மற்றும் கரடிகள் நிறுவனம் அறுபது சதவீத வெளியீட்டிற்கு ஒப்புறுதி அளிக்கின்றது. 800 கடன் பத்திரங்களுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு, அவைகள் ஏற்கப்பட்டு அவற்றிற்கான முழுத்தொகையும் பெறப்படுகின்றது. இவைகளுக்கான குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.

17. Explain different methods of valuing shares.

பங்குகளை மதிப்பிடுகின்ற பல்வேறு முறைகளைப் பற்றி விளக்குக.

18. What are the merits of an audit programme?

தணிக்கை நிகழ்ச்சி நிரலின் நன்மைகள் யாவை?

19. Explain various types of vouchers.

சான்றுகளின் பல்வேறு வகைகளைப் பற்றி விளக்குக.

20. As an auditor, while vouching the payments, what points should be given in your special attention?

ஒரு தணிக்கையர் என்ற முறையில், செலுத்துதல்களை சான்றாய்வு செய்யும் போது, என்னென்ன காரணிகளுக்கு நீங்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்?

SECTION C — (2 × 20 = 40 marks)

Answer any TWO questions.

All questions carry equal marks.

Each answer should not exceed 500 words.

21. From the following information calculate the value per equity share :

| | Rs. |
|---|---|
| 2,000 9% preference shares of Rs. 100 each | 2,00,000 |
| 50,000 equity shares of Rs. 10 each, | |
| Rs. 8 per share paid up | 4,00,000 |

| | Rs. |
|---|---|
| Expected profits per year before tax | 2,18,000 |
| Rate of Tax | 50% |
| Transfer to General reserve every year | 20% of the profit |
| Normal rate of the earning | 15% |

கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சாதாரணப் பங்கு ஒன்றிற்கான மதிப்பினை கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| ரூ. 100 மதிப்புள்ள 2,000 9% முன்னுரிமை பங்குகள் | 2,00,000 |
| ரூ. 10 மதிப்புள்ள, ரூ. 8 செலுத்தப்பட்ட | |
| 50,000 சாதாரண பங்குகள் | 4,00,000 |
| வரிக்கு முன் எதிர்பார்க்கப்படும் ஆண்டு இலாபம் | 2,18,000 |
| வரி வீதம் | 50% |
| ஒவ்வொரு ஆண்டும் பொதுக்காப்பிற்கு மாற்றம் | இலாபத்தில் 20% |
| பொதுவான வருவாய் | 15% |

22. Prepare a Balance Sheet as at 31st March, 1998 from the following information of ABC Limited.

| | Rs. |
|---|---|
| Term loan | 10,00,000 |
| Sundry creditors | 11,45,000 |
| Advances | 3,72,000 |
| Cash and bank balances | 2,75,000 |
| Staff advances | 55,000 |
| Provision for taxation | 1,70,000 |
| Share premium | 4,75,000 |
| Loose tools | 50,000 |
| Investments | 2,25,000 |

| | Rs. |
|---|---|
| Loss for the year | 3,00,000 |
| Sundry debtors | 12,25,000 |
| Miscellaneous expenses | 58,000 |
| Loans from debtors | 2,00,000 |
| Provision for doubtful debts | 20,200 |
| Stores | 4,00,000 |
| Fixed Assets (WDV) | 51,50,000 |
| Finished goods | 7,50,000 |
| General reserve | 20,50,000 |
| Capital work-in-progress | 2,00,000 |

Additional Information :

(a) Share capital consists of :

(i) 3,000 equity shares of Rs. 100 each fully paid up,

(ii) 10,000 10% redeemable preference shares of Rs. 100 each fully paid up.

(b) Term loans are secured

(c) Depreciation on assets Rs. 5,00,000.

கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து ABC நிறுவனத்தில 31 மார்ச் 1998 – தேதியிட்ட இருப்பு நிலைக் குறிப்பினை தயாரிக்க.

| | ரூ. |
|---|---|
| காலக் கடன் | 10,00,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | 11,45,000 |
| முன்பணம் | 3,72,000 |
| ரொக்கம் மற்றும் வங்கியிருப்புகள் | 2,75,000 |
| அலுவலர்களுக்கு முன்பணம் | 55,000 |
| வரிக்கான ஒதுக்கீடு | 1,70,000 |
| பங்கு முனைமம் | 4,75,000 |

| | ரூ. |
|---|---|
| இதர கருவிகள் | 50,000 |
| முதலீடுகள் | 2,25,000 |
| ஆண்டிற்கான நட்டம் | 3,00,000 |
| பற்பல கடனாளிகள் | 12,25,000 |
| இதர செலவினங்கள் | 58,000 |
| கடனாளிகளிடமிருந்து கடன் | 2,00,000 |
| ஐயக்கடன் ஒதுக்கு | 20,200 |
| உதிரி பாகங்கள் | 4,00,000 |
| நிலைச்சொத்துக்கள் (WDV) | 51,50,000 |
| முடிவுற்ற பொருட்கள் | 7,50,000 |
| பொதுக்காப்பு | 20,50,000 |
| மூலதன முடிவுறா பொருள் | 2,00,000 |

கூடுதல் செய்திகள் :

(அ) பங்கு முதலானது

(i) ரூ. 100 மதிப்புள்ள முழுதும் செலுத்தப்பட 3,000 சாதாரணப்பங்குகள்

(ii) ரூ. 100 மதிப்புள்ள முழுதும் செலுத்தப்பட 10,000 10% மீள்தகு முன்னுரிமை பங்குகள்

(ஆ) காலக்கடன்கள் அனைத்தும் பிணையப் பாதுகாப்பு பெற்றதாகும்.

(இ) சொத்துக்கள் மீதான தேய்மானம் ரூ. 5,00,000.

23. Discuss the rights and duties of an auditor in detail.

ஒரு தணிக்கையரின் உரிமைகள் மற்றும் கடமைகளைப் பற்றி விரிவாக விளக்குக.

24. Discuss the advantages of an audit.

ஒரு தணிக்கையின் நன்மைகளைப் பற்றி விளக்குக.